**செய்தி வெளியீடு எண்: 212** **நாள்: 04–03–2011**

# தமிழ் வளர்ச்சித் துறை.

## ஔவையார் திருவுருவச் சிலைக்குத் தமிழ்நாடு அரசு சார்பில் மலர் தூவிப் போற்றல்

மக்கள் சமுதாயம் சிறக்க மாட்சி மிக்க நீதிநெறிக் கருத்துகளை வழங்கி, தமிழின் சிறப்பை நிலை நிறுத்தியவர் ஔவையார். பெண் குலத்திற்குப் பெருமை சேர்த்துள்ள ஔவைப் பெருமாட்டியைப் போற்றும் வகையில் உலக மகளிர் தினமான **8.3.2011**ஆம் நாளன்று காலை **9.00** மணிக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை மெரினா கடற்கரை காமராசர் – சாலையில் அமைந்துள்ள அவரின் திருவுருவச் சிலைக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் மலர் தூவிப் போற்றல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் அரசு அலுவலர்கள், தமிழ் அறிஞர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**